**செய்தி வெளியீடு எண்: 544** **நாள்:27.08.2019**

## செய்தி வெளியீடு

## தமிழ் நாடு மின்னாளுமை முகமை- ஆய்வுக்கூட்டம்

மாண்புமிகு வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் உயர்திரு R.B. உதயகுமார் அவர்கள் தமிழ்நாடு மின்னாளுமை முகமை அலுவலகத்தில் 27.08.2019 அன்று ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டார். மேற்கண்ட ஆய்வு கூட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்துறை அரசு முதன்மை செயலர் டாக்டர்.சந்தோஷ் பாபு ஐ.ஏ.எஸ், தமிழ் நாடு மின்னாளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா ஐ.ஏ.எஸ் ,இணை செயல் அலுவலர் திருமதி. பெ.ரமணசரஸ்வதி ஐ.ஏ.எஸ் மற்றும் கணினி பகுப்பாய்வாளர்கள் ,உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வு கூட்டத்தின் போது தமிழ் நாடு மின்னாளுமை முகமையின் செயல்பாடுகள் ,அரசு இ -சேவை மையங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். Hbf மேலும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்காக **(Artificial Intelligence,Blockchain,Internet of Things ,Machine Learning, Data Analytics)** ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு மையத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**